## பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
# நிக3மநப்படி

### திருமந்த்ரப்ரகரணம்

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே |
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப4ஶ் ஸ்ரீத4ரஸ் ஸதா3 ||

திருமந்த்ரம் எட்டு திருவக்ஷரமாய், மூன்று பத3மாயிருக்கும். எங்ஙனேயென்னில்: "ஓம்" என்றும், "நம:" என்றும், "நாராயணாய" என்றும் மூன்று பத3மாயிருக்கும். அதில் முதல் பத3ம் ஏகாக்ஷரமான ப்ரணவம். இது அகாரமென்றும், உகாரமென்றும், மகாரமென்றும் மூன்று திருவக்ஷரமாய் மூன்று பத3மாயிருக்கும். இரண்டாம் பத3மான நமஸ்ஸு, 'ந' என்றும், 'ம:' என்றும் இரண்டு திருவக்ஷரமாய் இரண்டு பத3மாயிருக்கும். மூன்றாம் பத3மான 'நாராயணாய' பத3ம் அஞ்சு திருவக்ஷரமாய், 'நார' என்றும், 'அயந' என்றும் இரண்டு பத3மாய், மேல் 'ஆய' வென்று சதுர்த்தி2யாயிருக்கும். எம்பெருமானுடைய ஸர்வரக்ஷக த்வமும், ஸமஸ்தகல்யாண கு3ணாத்மகத்வமும், ஸர்வஶேஷித்வமும், ஶ்ரிய:பதித்வமும் இவை அகாரார்த்த2ம். அந்யஶேஷத்வநிவ்ருத்தியும், ப4க3வத3நந்யார்ஹ ஶேஷத்வமும் இவை உகாரார்த்த2ம். ஆத்மாவினுடைய ஜ்ஞாநாநந்த3த்வமும், ஜ்ஞாநகு3ணகத்வமும், நித்யத்வமும், அணுத்வமும், ஏகரூபத்வமும், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாஶத்வமும், ப்ரக்ருதே: பரத்வமும் இவை மகாரார்த்த2ம். ஸ்வாஹங்காரமமகார நிவ்ருத்தியும், நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய அத்யந்தபாரதந்த்ர்யமும், பாரதந்த்ர்யபராகாஷ்டை2யான ததீ3ய ஶேஷத்வமும், பரதந்த்ரனுக்கு அநுரூபமான உபாயத்வமும் இவை நமஶ்ஶப்3த3ார்த்த2ம். சேதநாசேதநங்களினுடைய நித்யத்வமும், அவற்றினுடைய ஸமூஹத்வமும், ஸமூஹாஸங்க்2யாதத்வமும் இவை நாரஶப்3த3ார்த்த2ம். ஈஶ்வரனுடைய த4ாரகத்வமும், வ்யாபகத்வமும், நியந்த்ருத்வமும், ஸர்வவித4ப3ந்து4த்வமும், ப்ராப்யத்வமும், ப்ராபகத்வமும், ஸகலஜக3த்காரணத்வமும் இவை அயநஶப்3த3ார்த்த2ம். நித்யகைங்கர்ய ப்ரார்த்த2னை ஆயஶப்3த3ார்த்த2ம். எம்பெருமானையொழிய ரக்ஷகாந்தர ப்ரதிபத்தி நடையாடிற்றாகில் அகாரார்த்த2ம் நெஞ்சில் பட்டதில்லையாகக்கடவது. அந்யஶேஷத்வம் நடையாடிற்றாகில் உகாரார்த்த2ம் நெஞ்சில் பட்டதில்லையாகக்கடவது. அநாத்மாவான தே3ஹத்தில் ஆத்மபு3த்3தி4 நடையாடிற்றாகில் மகாரார்த்த2ம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. ஸ்வஸ்வாதந்த்ர்யமும், ஸ்வரக்ஷணப்ரதிபத்தியும், ஸ்ரீவைஷ்ணவஸமபு3த்3தி4யும், உபாயாந்தரமும் நடையாடிற்றாகில் நமஶ்ஶப்3த3ார்த்த2ம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. ஈஶ்வரஶரீ பூ4தரான சேதநாசேதநங்களோடே ராக3த்3வேஷம் நடையாடிற்றாகில் நாரஶப்3த3ார்த்த2ம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. அப3ந்து4க்கள் பக்கலிலே ப3ந்து4த்வப்ரதிபத்தி நடையாடிற்றாகில் அயநஶப்3த3ார்த்த2ம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. அபே4ாக்3யமான ஶப்3த3ாதி3 விஷயங்களிலே பே4ாக்3யதாபு3த்3தி4 நடையாடிற்றாகில் ஆயஶப்3த3ார்த்த2ம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. திருமந்த்ரத்துக்கு தாத்பர்யார்த்த2மேது வாக்யார்த்த2மேது? ப்ரத4ாநார்த்த2மேது? அநுஸந்த4ாநார்த்த2மேது? என்னில்: தாத்பர்யார்த்த2ம்:– ஸகலவேத3ஶாஸ்த்ரருசி பரிக்3ருஹீதம்: வாக்யார்த்த2ம்:–

ப்ராப்யஸ்வரூபநிரூபணம். ப்ரத4ாநார்த்த2ம்:– ஆத்மஸ்வரூபநிரூபணம். அநுஸந்த4ாநார்த்த2ம்:– ஸம்ப3ந்த4ாநுஸந் த4 ாநம். ஸம்ப3ந்த4மேதென்னில்:– அகாரபத3த்தாலே பிதாபுத்ர ஸம்ப3ந்த4ம் சொல்லி, [1]"அவ–ரக்ஷணே" என்கிற த4ாதுவினாலே ரக்ஷ்யரக்ஷகஸம்ப3ந்த4ம் சொல்லி, லுப்தசதுர்த்தி2யாலே ஶேஷிஶேஷஸம்ப3ந்த4ம் சொல்லி, உகாரபத3த்தாலே ப4ர்த்ருப4ார்யா ஸம்ப3ந்த4ம் சொல்லி, மகாரபத3த்தாலே ஜ்ஞாத்ருஜ்ஞேயஸம்ப3ந்த4ம் சொல்லி, நம: பத3த்தாலே ஸ்வஸ்வாமிஸம்ப3ந்த4ம் சொல்லி, நாரபத3த்தாலே ஶரீரஶரீரிஸம்ப3ந்த4ம் சொல்லி, அயநபத3த்தாலே ஆத4ாராதே4யஸம்ப3ந்த4ம் சொல்லி, ஆயபத3த்தாலே போ4க்த்ருத்வபோ4க்3யத்வ ஸம்ப3ந்த4ம் சொல்லி, ஆக திருமந்த்ரத்தால் நவவித4ஸம்ப3ந்த4ம் சொல்லித் தலைக்கட்டுகிறது.

## த்3வயப்ரகரணம்.

த்3வயம் இரண்டு வாக்யமாய், ஆறு பத3மாய், பத்தர்த்த2மாய், இருபத்தஞ்சு திருவக்ஷரமாயிருக்கும். அதில் பூர்வவாக்யம் பதினஞ்சு திருவக்ஷரமாய், உத்தரவாக்யம் பத்துத் திருவக்ஷரமாய் இருக்கும். எங்ஙனேயென்னில்: "ஸ்ரீமந்நாராயணசரணௌ ஶரணம் ப்ரபத்3யே" என்றும், "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்றும் இரண்டு வாக்யமாயிருக்கும். "ஸ்ரீமந்நாராயணசரணௌ" என்றும், "ஶரணம்" என்றும், "ப்ரபத்3யே" என்றும், "ஸ்ரீமதே" என்றும், "நாராயணாய" வென்றும் , "நம:" என்றும் ஆறு பத3மாய், "ஸ்ரீ" என்றும், "மந்" என்றும், "நாராயண" என்றும், "சரணௌ" என்றும், "ஶரணம்" என்றும் "ப்ரபத்3யே " என்றும், "ஸ்ரீமதே" என்றும், "நாராயண" வென்றும், "ஆய" வென்றும், "நம:" என்றும், பத்து அர்த்த2மாயிருக்கும். 'ஸ்ரீ' என்கையாலே எம்பெருமானுக்கே மறக்கவொண்ணாத பெரியபிராட்டியாருடைய புருஷகாரத்வம் சொல்லி, 'மந்' என்கையாலே அப்புருஷகாரத்தினுடைய நித்யயோக3ம் சொல்லி, 'நாராயண' என்கையாலே இப்படி புருஷகாரபூ4தையான பெரியபிராட்டியார் தான் குறைசொல்லிலும், "என்னடியாரதுசெய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்னும்படியான வாத்ஸல்யாதி3கு3ணயோக3ம் சொல்லி, 'சரணௌ' என்கையாலே அக்கு3ணங்களுக்கும் பெரிய பிராட்டியாருக்கும் ஆஶ்ரயணீயமான விலக்ஷண விக்3ரஹ யோக3ம் சொல்லி, 'ஶரணம்' என்கையாலே அவ்விக்3ரஹமே உபாயமென்னுமிடம் சொல்லி, 'ப்ரபத்3யே' என்கையாலே உபாயஸ்வீகாரம் பண்ணின அதி4காரியினுடைய அத்4யவஸாயம் சொல்லி, 'ஸ்ரீமதே' என்கையாலே மிது2னமே ப்ராப்யம் என்னுமிடம் சொல்லி, 'நாராயண' என்கையாலே எம்பெருமானுடைய ஸர்வஸ்வாமித்வம் சொல்லி, 'ஆய' என்கையாலே அவன் திருவடிகளிலே பண்ணும் வ்ருத்திவிஶேஷம் சொல்லி, 'நம:' என்கையாலே அவ்வ்ருத்திக்கு விரோதி4யான ஸ்வாஹங்காரமமகார நிவ்ருத்தியைச் சொல்லித் தலைக்கட்டுகிறது. த்3வயத்துக்குத் தாத்பர்யார்த்த2மேது? வாக்யார்த்த2மேது? ப்ரத4ாநார்த்த2மேது? அநுஸந்த4ாநார்த்த2ம் ஏது? என்னில்: தாத்பர்யார்த்த2ம்:– ஆசார்யருசி பரிக்3ருஹீதம். வாக்யார்த்த2ம்:– ப்ராபகஸ்வரூபநிரூபணம். ப்ரத4ாநார்த்த2ம்:– மிது2ந கைங்கர்யம். அநுஸந்த4ாநார்த்த2ம்:– ஸ்வதோ3ஷாநுஸந்த4ாநம் சொல்லித் தலைக்கட்டுகிறது.

## நிகமநப்படி – ப3

### சரமஶ்லோக ப்ரகரணம்

சரமஶ்லோகம் இரண்டு அர்த்த$_4$மாய், பதினொரு பத$_3$மாய், முப்பத்திரண்டு திருவக்ஷரமாயிருக்கும். எங்ஙனேயென்னில்: "ஸர்வத$_4$ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ, அஹம் த்வாஸர்வபாபேப்$_4$யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுச:" என்றும் இரண்டர்த்த$_4$மாயிருக்கும். "ஸர்வத$_4$ர்மாந்" என்றும், 'பரித்யஜ்ய' என்றும், 'மாம்' என்றும், 'ஏகம்' என்றும், 'ஶரணம்' என்றும், 'வ்ரஜ' என்றும், 'அஹம்' என்றும், 'த்வா' என்றும், 'ஸர்வபாபேப்$_4$ய:' என்றும், 'மோக்ஷயிஷ்யாமி' என்றும், 'மாஶுச' என்றும் பதினொரு பத$_3$மாயிருக்கும். "ஸர்வத$_4$ர்மாந்" என்கையாலே இதரோபாயங்களைச் சொல்லி, "பரித்யஜ்ய" என்கையாலே இதரோபாயநிவ்ருத்தியைச் சொல்லி, "மாம்" என்கையாலே ஸம்யக்ஜ்ஞாநோபாயம் சொல்லி, "ஏகம்" என்கையாலே உபாயநைரபேக்ஷ்யம் சொல்லி, "ஶரணம்" என்கையாலே உபாயத்வம் சொல்லி, "வ்ரஜ" என்கையாலே உபாயஸ்வீகாரம் சொல்லி, "அஹம்" என்கையாலே தன்னுடைய ஸர்வஶக்தித்வம் சொல்லி, "த்வா" என்கையாலே உபாயஸ்வீகாரம் பண்ணின அதி$_4$காரிஸ்வரூபம் சொல்லி, "ஸர்வபாபேப்$_4$ய:" என்கையாலே ப்ராப்யப்ரதி$_3$பந்த$_4$கங்களைச் சொல்லி, "மோக்ஷயிஷ்யாமி" என்கையாலே ப்ராப்யப்ரதி$_3$பந்த$_4$கநிவ்ருத்தியைச் சொல்லி, "மாசுச:" என்கையாலே நிர்ப்ப$_4$ரத்வாநுஸந்தா$_4$நம் சொல்லித் தலைக்கட்டுகிறது. சரமஶ்லோகத்துக்குத் தாத்பர்யார்த்த$_2$மேது? வாக்யார்த்த$_2$மேது? ப்ரதா$_4$நார்த்த$_2$மேது? அநுஸந்தா$_4$நார்த்த$_2$மேது? என்னில்: தாத்பர்யார்த்த$_2$ம்:– ஶரண்யருசிபரிக்$_3$ருஹீதம்; வாக்யார்த்த$_2$ம்:– ப்ராபகஸ்வரூபநிரூபணம்; ப்ரதா$_4$நார்த்த$_2$ம்:– ஈஶ்வரஸ்வரூபநிரூபணம்; அநுஸந்தா$_4$நார்த்த$_2$ம்:– நிர்ப்ப$_4$ரத்வாநுஸந்தா$_4$நம் சொல்லித் தலைக்கட்டுகிறது.

நிக$_3$மநப்படி முற்றிற்று.

**பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.**

— — — —